Rent for the Panchayat Union Quarters

* 84. Q.—THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether it is a fact that rent is charged at 10 per cent of the pay from Women Teachers, irrespective of the fact whether they stay in the quarters of the Panchayat Union or not; and

(b) if so, whether the Government will issue an order not to collect rent from Women Teachers, who do not occupy the quarters of the Panchayat Unions?

ஊராட்சி ஒன்றியக் குடியிருப்புகளுக்கு வாடகை.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஊராட்சி ஒன்றியக் குடியிருப்புகள், ஊ: ஆசிரியைகள் குடியிருந்தாலும், இல்லாவிட்டாலும், சம்பளத்தில் 10 விழுக்காடு வாடகை வசூலிக்கப்படுவது உண்மையா?

(இ) ஆமெனில், ஊராட்சி ஒன்றியக் குடியிருப்புகளில் குடியில்லாத ஆசிரியைகளிடமிருந்து அக்குடியிருப்புகளுக்காக வாடகை வசூலிக்கக்கூடாது எனஅரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) & (இ) ஊராட்சி ஒன்றியத்தில் ஆசிரியைகளாகப் பணி புரியும் பெண்களுக்கென்று ஊராட்சி ஒன்றியங்களால் கட்டப்பட்டுள்ள ஒரு வீட்டில் ஊராட்சி ஒன்றிய ஆசிரியை ஒருவர் குடியிருந்தால் அந்த ஊராட்சி ஒன்றியம் வாடகை வசூலிக்கவோ அல்லது வசூலிக்காமல் விட்டுவிடவோ செய்யலாம் என்று உத்தரவிடப் பட்டுள்ளது. ஆகவே ஊராட்சி ஒன்றியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்பில் குடியிராத ஆசிரியையிடமிருந்து ஊராட்சி ஒன்றியம் வாடகை வசூல் செய்ய முடியாது. ஆயினும் அப்படி ஏதாவது ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் வாடகை வசூல் செய்யப்படுகிறது என்று குறிப்பிட்டுக் காட்டினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, கிராமத்தில் உள்ள ஆசிரியர்களுக்காகக் கட்டப்பட்டிருக்கக்கூடிய வீடுகளுக்கு வசூலிக்கக் கூடிய வாடகையைவிட குறைந்த வாடகைக்கு அந்த வீடுகளைவிட வசதியான வீடுகள் கிடைப்பதாலே அங்கே இருக்கிறார்கள். அந்த வீடுகள் ஆசிரியர் களுக்காகக் கட்டப்பட்டிருக்கிற காரணத்தால் கட்டாயம் ஆசிரியர்கள்

1973 நவம்பர் 23]

'ஆக்குபை' செய்ய வேண்டும், இல்லாவிட்டால் பணத்தைப் பிடிப்போம் என்று ஊராட்சி ஒன்றியங்கள் செயல்படுவதை நிறுத்துவதற்கு அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்காக வீடு என்று ஒரு குறிப்பிட்ட முறையிலே வீடுகள் கட்டி வைத்திருக்கின்ற காரணத்தாலே, வசதிகள் அதிகம் வேண்டும் என்பதற்காக பெரிய வீடுகள் தேவை என்றால், அதை அவர்கள்தான் கொடுக்க வேண்டுமே தவிர, அந்த விதியை மாற்றிக்கொள்ள முடியாது.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, நகரத்திலே இருப்பவர்களுக்கும் 10 சதவிகிதம், கிராமத்திலே இருப்பவர்களுக்கும் 10 சதவிகிதம் வாடகை என்பது சரிதானா? கிராமப் பொருளாதாரமும், நகரப் பொருளாதாரமும் ஒரே மாதிரியாக இருக்கிறதா என்பதை அரசு பரிசீலிக்க முடியுமா? கிராமத்திலே குறைந்த வாடகைக்கு நல்ல வீடுகள் கிடைக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, கிராமத்திலே இருக்கிற ஆசிரியர்களுக்கும், நகரத்திலே இருக்கிற ஆசிரியர்களுக்கும் சம்பள விகிதாசாரம் ஒன்றுதான். நகரத்தில் வேண்டுமானால் நகர ஈட்டுப்படி கொடுக்கப்பட்டிருக்கலாம். சம்பளம் ஒரே விகிதாசாரத்திலே இருக்கிறது. அதனாலே உயர்வு தாழ்வு கற்பிப்பது சரியல்ல.

Aid from the Government of India for the Development of Panchayat Union Blocks

* 85. Q.—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether it is a fact that aid from the Government of India for the development of Panchayat Union Blocks is to be stopped;

(b) if so, from when and the reason therefor; and

(c) the action proposed to be taken by the Government in the matter?